[*2022 ஏப்ரல் 25*

சுற்றுச் சுவர் சிதிலமடைந்திருக்கிறது. அருகாமையிலிருக்கின்ற குளம் சிதிலமடைந்திருக்கின்றது. இந்த இரண்டு பணிகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வருகின்ற மானியக் கோரிக்கையிலே அந்தப் பணிகளும் சேர்த்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 171, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

171—

குழந்தைகள் நூலகப் பிரிவு

***3285—திரு. ரூபி ஆர். மனோகரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரியில் உள்ள நூலகத்தில் நவீன வசதியுடன்கூடிய குழந்தைகள் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி, தங்களுடைய அனுமதியோடு விடையளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி கிளை நூலகம் 31–5–1954–ல் துவக்கப்பட்டு, பின்னர் 20–8–2008 முதல் முழுநேர கிளை நூலகமாகத் தரமுயர்த்தப்பட்டு, 920 சதுர அடி பரப்பளவு கொண்ட சொந்தக் கட்டடத்தில் நூல் இரவல் பிரிவு, நாளிதழ்/பருவ இதழ் பிரிவு, போட்டித் தேர்வு பயிற்சி மையம் ஆகிய பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. தற்போது, இந்நூலகத்திற்கு நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.6.00 இலட்சம் மதிப்பில் 480 சதுர அடியில் கூடுதல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இந்நூலகத்திற்கு முதற்கட்டமாக 5 கணினிகள் 28–3–2022 அன்று வழங்கப்பட்டுள்ளன. மேலும், அக்கட்டடத்தில் குழந்தைகளுக்கான

2022 ஏப்ரல் 25]

நூல்கள், தொலைக்காட்சி வசதி, குழந்தைகளுக்கான நாற்காலி மற்றும் மேசைகள், Maps, Globes, Learning Games, Toys *ஆகியவற்றுடன் நவீனமயமாக்கப்பட்ட குழந்தைகள் பிரிவு துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள்.*

திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாங்குநேரி தொகுதியிலுள்ள கிராமங்களில் அமைந்திருக்கின்ற பல நூலகங்கள் பல ஆண்டுகளாக பராமரிப்பின்றி மூடிக்கிடக்கின்றன.*

இளைஞர்களிடம் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த வருடம் பிப்ரவரி மாதம் 16 ஆம் தேதி சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றினார்கள். கொரோனா காலத்திற்குப் பிறகு 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஆர்வமாக அதில் கலந்துகொண்டார்கள். 12 கோடி ரூபாய்க்கு புத்தகங்கள் விற்பனையாகியிருக்கின்றன. இதைத் தொடர்ந்து, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாவட்டந்தோறும் புத்தகக் கண்காட்சிகள் நடைபெற்றன. திருநெல்வேலி மாவட்டத்திலும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தகம் வாசிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு முதலில் என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புத்தகம் வாசிக்கும் இந்த ஆர்வத்தைத் தமிழக மக்களிடம் ஏற்படுத்திய மாண்புமிகு முதல்வர் அவர்கள், நூலகங்களைச் சீர் செய்திட வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை வைக்கிறார்கள்.

ஒரு நூலகம் திறப்பது என்பது 100 சிறைச்சாலைகளை மூடுவதாக பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசியதை நாம் அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கிறோம். எனவே, புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை இளைஞர்களுக்கும், குழந்தைகளுக்கும்

கொண்டு செல்ல கிராமப் பஞ்சாயத்துகள்தோறும் நூலகங்களைச் சீர் செய்து, நூலகம் இல்லாத பஞ்சாயத்துகளில் புதிய நூலகம் அமைத்திட, அதாவது ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு நூலகம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புத்தகத்தில் உலகைப் படிக்கலாம், உலகையே புத்தகமாகப் படிக்கலாம்' என்கின்ற வாசகத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நம்மிடையே விட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆக, அந்த வகையில்தான் தற்போது நூல்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

முற்பகல் 11—05

மாண்புமிகு உறுப்பினர், ஊர்ப்புறத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு நூலகம் கேட்கிறார்கள். இது ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய, மாண்புமிகு அண்ணன் அவர்களுடைய துறையின்கீழ் வருகிறது. எனது துறையின் கட்டுப்பாட்டில் கிட்டத்தட்ட 4,650 நூலகங்கள் இருக்கின்றன. அதை மேம்படுத்துவதற்காக, குழந்தைகளுக்கு வாசிக்கின்ற பழக்கத்தை நாம் உருவாக்க வேண்டுமென்று நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். இது சம்பந்தமாக Mortimer J. Adler எழுதிய 'How to Read a Book' என்ற ஒரு புத்தகமே இருக்கின்றது. வாரத்திற்கு ஒரு புத்தகத்தை நாம் படிக்க வேண்டும். முதல் வாசிப்பாளர்கள் 50 பக்கங்கள் இருக்கின்ற நூல்களை முதலில் வாசிக்க, படிக்கப் பழகிக் கொள்ள வேண்டுமென்று அதில் பல வழிமுறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. புத்தகம் படிக்க வேண்டுமென்பதில் interest ஆக இருக்க வேண்டும். அந்தவகையில், அதையும் நாங்கள் ஒவ்வொரு பகுதியிலும் செய்துகொண்டிருக்கின்றோம். நேற்றுகூட பார்த்தீர்களென்றால், நம்முடைய பள்ளிக் கல்வித் துறையின் சார்பாக பள்ளிப் பாதுகாப்பு இயக்கம், முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வசந்திதேவி அவர்கள்கூட, 'இல்லம் தேடிக் கல்வி' என்ற திட்டத்தின்கீழ் 1,000 centres-ல் 10, 10 புத்தகங்களாக சிறிய சிறிய நூலகங்களாக உருவாக்க வேண்டுமென்ற

2022 ஏப்ரல் 25]

நோக்கத்தில், திருச்சி மாவட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில் ஒரு நிகழ்ச்சியில் நாங்கள் கலந்துகொண்டு, தொடங்கி வைத்தோம். இப்போது 1,000 centres*-ல் தொடங்கி, தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் இந்த மாதிரி புத்தகங்கள் வாசிக்கின்ற பழக்கம் பரவ வேண்டும்; அதைக் குழந்தைப் பருவத்திலிருந்தே உருவாக்க வேண்டுமென்ற வகையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் இருக்கின்ற அரசாங்கம் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. கண்டிப்பாக நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. ரூபி மனோகரன் அவர்கள் சொன்னதுபோன்று இன்னும் இதை அதிகப்படுத்துவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதைத் துறையின் சார்பாக நாங்கள் செய்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2006-2011-லேயே மாண்புமிகு இன்றைய முதல்வர் அவர்கள் அன்று உள்ளாட்சித் துறை அமைச்சராக, மாண்புமிகு துணை முதல்வராக இருந்தபோது எல்லா கிராம ஊராட்சிகளிலும் ஒரு நூலகம் அமைத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள்.*

திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்குநேரி தொகுதி, மூலக்கரைப்பட்டி பேரூராட்சியில், நாகல்குளம் அரசு மேல்நிலைப் பள்ளி முழுவதுமாக இடிந்து விழுந்துவிட்டது. இப்போது ஒரு தனியார் வீட்டில் அந்தப் பள்ளி நடந்து வருகிறது. எனவே, அதை உடனடியாகக் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்டு அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பள்ளிக்கூடம் எப்படி இருக்கின்றது என்பதை துறைரீதியாக, அங்கிருக்கின்ற* CEO, DEO, BEO *மூலமாக ஆராய்ந்து, உடனடியாக அதற்கு*

என்ன தேவையோ அதைக் கண்டிப்பாக அரசு செய்து தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் கோயில், இராஜகோபுரம் புதுப்பித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள், முனைவர் கோவி. செழியன், அரசு தலைமைக் கொறடா மற்றும் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவர். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் கோயில் இராஜகோபுரத்தைப் புதுப்பிக்க வேண்டியது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்த விவர அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களின் மேசையில் வைக்கப்பட்டுள்ள சிறு கணினியில் 'கவன ஈர்ப்பு' என்ற தலைப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.